# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.101/2022

## அ.சா. 2 (LW 2 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திருமதி. சாந்தி** | **தொழில்** | |
| **க /பெயர்** | ரத்தினகுமார் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **11.02.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ,2 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் புங்கம்பாடியில் குடியிருந்து வருகிறேன். புங்கம்பாடி பிரிவில் ஓட்டல் கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும். கடந்த 06.05.2021 அன்று இரவு 07.00மணி அளவில் நான் இட்லி கடை நடத்திக் கொண்டிருந்த போது அப்போது கொரனா காலம் என்பதால் கடையை மூடிவைத்து விட்டு உள்ளே இருந்தோம். கடைக்குள் எனது பாப்பா அங்காளபரமேஸ்வரி, வேலை செய்யும் நபர் பவுன்ராணி நான் ஆகிய மூவரும் உள்ளே இருந்தோம். அப்போது கடைக்கு இட்லி உள்ளதா என ஒருவர் கேட்டு வந்தார். அப்போது நான் இட்லி இல்லை என நான் சொன்ன பின்பு ஆஜர் எதிரிகள் இருவரும் வந்து இன்னும் கடையை நடத்துகிறாயா என கேட்டார்கள். அப்போது இட்லி வாங்க வந்தவரும் ஆஜர் எதிரிகளும் அசிங்கமாக பேசி அடித்துக் கொண்டதால் நான் வெளியே வந்து என்ன நடந்தது என்று நான் பார்க்கவில்லை. பின்பு ஆம்புலன்ஸ் வந்து இறந்தவரை எடுத்துச் சென்றது தெரியும் . மறுநாள் அவர் இறந்து விட்டார் என நான் கேள்விப்பட்டேன்.

**<u>இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநியம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

மறுநாள் என்னை போலிசார் விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகள் இருவரும் நீண்ட நாட்களாக எங்கள் ஊரில் கடை நடத்தி வருகிறார்கள் . அவர்களது கடை என் இட்லி கடைக்கு எதிரில் உள்ளது. என் கடைக்கும், அவர்களது கடைக்கும் அவ்வப்போது வியாபார நிமித்தமாக எந்த கருத்துவேறுபாடும் இல்லை. எங்களும், எதிரிகளுக்கும் சண்டை சச்சரவுகள் வியாபார நிமித்தமாக அவ்வப்போது வருவது உண்டா என்றால் இல்லை. கொரானா காலத்தில் அத்தியாவசிய வியாபாரமான உணவகம் நடத்த அரசாங்கள் அனுமதி அளித்திருந்தது என்றால் சரிதான். 06.05.2021

அன்று எங்கள் ஊரில் ஒரு பெரிய காரியம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. பெரியகாரியத்திற்கு வந்த நபர்கள் காலையில் வந்து எங்கள் ஓட்டலில் உணவு சாப்பிட்டு விட்டு போனார்கள் என்றால் சரிதான். இரவு 06.30 மணிக்கு கடையை மூடி விட்டேன். அன்றைய தேதியில் எதிரிகள் கடையை திறந்து வைத்து வியாபாரம் செய்தார்களா என்றால் எனக்கு தெரியாது. எனக்கும், எதிரிகளுக்கும் வியாபார நிமித்தமாக சண்டை சச்சரவு இருந்தது என்றால் எனக்கு தெரியாது. வெளியில் பேசிக் கொளவ்ாரா்கள். 06.05.2021 அன்று மாலை 07.00 மணி அளவில் வழக்கில் இறந்த பன்னீர் செல்வம் எங்கள் கடைக்கு வந்து வியாபாரம் வாங்க வந்தாரா என்றால் ஒருவர் தான் வந்தார். பெயர் தெரியாது. அன்று இரவு 07.00 மணிக்கு எதிரிகள் இருவரும் எங்கள் கடைக்கு வந்து அசிங்கமாக பேசி எங்களிடம் சண்டை போட்டார்கள் என்றாலும் அசிங்கமாக, அசிங்கமாக பேசிக் கொண்டு வெளியில் இருந்து யாரிடம் சண்டை போட்டுக் கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. அப்போது கடையிலிருந்த பொருட்களை ஆஜர் எதிரிகள் அடித்து நொறுக்கினார்களா என்றால் அவர்கள் சென்ற பிறகு நான் வந்து பார்த்த போது கடையிலிருந்த எனக்கு சொந்தமான பொருட்கள் சேதமாகியிருந்தது. எனது ஓட்டலுக்கு வெளியில் ஒரு திறந்த வெளி செட் உள்ளது என்றால் சரிதான். அந்த செட்டில்தான் வைத்து எதிரிகள் இறந்து போன பன்னீர்செல்வத்தை சுவற்றில் அடித்து இரத்த காயப்படுத்தியதை நான் பார்த்தேன் என்றால் நான் பார்க்கவில்லை. சம்பவம் நடக்கும் போது இறந்தவரின் உறவினர் பாலன் என்பவர் வந்ததையும் அவரிடமும் ஆஜர் எதிரிகள் சண்டையிட்டதை நான் பார்த்தேனா என்றால் கூட்டமாக இருந்ததால் யார் என்று நான் சரியாக பார்க்கவில்லை. உள்ளிருந்து கம்பி வழியாக பார்த்துக் கொண்டிருந்தேன். குழந்தை இருந்ததால் வெளியே வரவில்லை. சம்பவம் நடக்கும் போது நானும் என் கடையிலிருந்த பவுன்ராணியும் சண்டையிட வேண்டாம் என்று உள்ளிருந்தே சத்தம் போட்டுக் கொண்டிருந்தோம். போலிசில் சொல்வதாக சொன்னோம். பின்னிட்டு போலிசில் தொலைபேசியில் தகவல் சொன்னோம். மறுநாள்தான் போலிசார் வந்தார்கள். சம்பவம் ஏற்பட்ட பிறகு சம்பவ இடமான எனது கடையில் இரத்தம் இருந்தது என்றால் சரிதான். அதை மறுநாள் போலிசார் வந்து பார்த்தார்கள். எனது கடையில் உடைந்திருந்த பொருட்களை போலிசார் பார்வையிட்டு சென்றனர். சம்பவம் நடந்த நாளன்று வெளியூர் நபர்களை தவிர்த்து ஆஜர் எதிரிகளை பார்த்தும் தற்போது தெரியாது என மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. சண்டை நடந்த போது ஆஜர் எதிரிகள் இருந்தார்கள்.

<u>1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இட்லி வாங்க 1 நபர்கதான் வந்தார். இட்லி வாங்க வந்த நபர்தான் இறந்தாரா என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளுக்கும், எங்களுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. பெரியகாரியத்திற்கு சம்பநாளன்று 10 பேர்கள் வந்திருப்பார்கள். மேற்படி நபர்களுக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் சண்டை நடந்தது என்றால் சரிதான், மேற்படி நபர்கள் தாக்கியதில் ஆஜர் எதிரிகள் அடிவாங்கி கொண்டு ஓடிவிட்டார்கள் என்றால் சரிதான் அவர்களுக்குள் எதற்காக சண்டையிட்டனர் என்று எனக்கு தெரியாது.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.11 19:03:22 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.